செ.வெ.எண்: 778/2016 நாள்: 07.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள்,
பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்,
மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தின் மூலம்,
24 மாற்றுத்திறனாளிகளுக்கு
ரூ. ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து ஐநூறு-க்கான காசோலைகளை
இன்று (07.11.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (07.11.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் மாற்றுத்திறனாளி நல வாரியத்தின் சார்பாக, 16 மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 22 ஆயிரத்து ஐநூறுக்கான காசோலைகளையும், 4 மாற்றுத்திறனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்காக ரூ. 68 ஆயிரத்திற்கான காசோலைகளையும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ. 500 மதிப்பிலான மூக்குக் கண்ணாடிகளும், 2 மாற்றுத்திறனாளி பெண்களுக்கு பிரசவத்திற்காக தலா ரூ.6 ஆயிரம் வீதம் 12 ஆயித்திற்கான காசோலைகளையும் என மொத்தம் 24 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து ஐநூறுக்கான காசோலைகளை இன்று (07.11.2016) மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ.இளங்கோ அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.